DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU

Calendar

Miscellaneous

Preliminary Register                    Case No.C.C. 38 of 2024  PW : 3

Sessions

Prosecution

Deposition of  witness for    Defence

Court

Name : திரு. கண்ணப்பன்

Father's Name : திரு. லட்சிகான்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 65

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.09.2025.

**தேதி..02.09.2025 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 38/2024, அ.த.சா.3, திரு.கண்ணப்பன் , த/பெ. லட்சிகான், வயது 65 அவர்களை சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செயய்ய அனுமதிக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கொளத்தூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 14.02.2023 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு எனது மகன் கோவிந்தசாமி என்பவர் எங்களுக்கு சொந்தமான கழனியில் சுப்பிரமணி (எ) ஜோசப், ஏசுநேசன், ஏசுமரியா, கிளியம்மாள் ஆகிய 4 நபர்களும் நடவு செய்து கொண்டிருந்தனர். அப்போது எனது மகன் மேற்படி நிலம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது ஏன் பயிர் செய்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு சுப்பிரமணி (எ) ஜோசப் என்பவர் கையில் வைத்திருந்த மண்வெட்டியால் எனது மகன் கோவிந்தசாமி தலையின் மீது வெட்டினார். மேற்படி ஏசுமரியா, கிளியம்மா மற்றும் ஜெயம்மா ஆகிய மூவரும் சேர்ந்து எனது மகன் அணிந்திருந்த வெள்ளி அரைஞாண் கயிறை சுப்பிரமணி (எ) ஜோசப் அடிக்கும் போது இறுக்கிக் பிடித்துக்கொண்டார்கள். மேலும் மேற்படி சம்பவம் நடந்த போது கோவிந்தசாமியின் மனைவி வள்ளி என்பவரும் அங்கிருந்தார். மேற்படி வள்ளி என்பவர் எதிரிகள் அடித்ததை செல்போன் மூலமாக போட்டோ எடுத்தார்.

2. பின்னர் எனது மகன் கோவிந்தசாமி மற்றும் அவரது மனைவி வள்ளி இருவரும் கழனீயில் இருந்து வீட்டிற்கு வந்தார்கள். பின்னர் சுமார் 2 மணியளவில் ஸ்டீபன் (எ) எழிலரசன், சதீஸ் (எ) ஆசைதம்பி, யோசுமரியாள், சுப்பிரமணி (எ) ஜோசப், ஆகிய 4 பேரும் தேவிடியா பையா என்று அசிங்கமான வார்த்தையால் எங்களை திட்டினார்கள்.

மேலும் உங்களை கொலை செய்யாமால் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். மேலும்சதிஸ் (எ) ஆசைத்தம்பி அவர் கையில் வைத்திருந்த உருட்டுக்கட்டையால் என் மகனின் தலை மீது அடித்தார்கள். ஆசைத்தம்பி அடித்ததில் என் மகனின் தலையில் இரத்தம் வடிந்தது.

3. மேலும் ஸ்டீபன் (எ) எழிலரசன் என் கழுத்தை நெரித்து அவருடைய இரண்டு கால்களுக்கு இடையே என் கழத்தை வைத்து நெருக்கினார். பின்னர் எதிரிகள் அனைவரும் அங்கிருநது ஓடிவிட்டார்கங். என் மகனும் நானும் பள்ளிப்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எங்கள் இருவருக்கும் பள்ளிப்பட்டு அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிக்சை அளித்தார்கள். மேலும் என் மகனுக்கு x–ray எடுக்கவும் மேல்சிகிச்கைக்காக திருததணி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு ஒரு வாரகாலமாக எனது மகன் சிகிச்சை பெற்றார். அங்கு அவர் தலையில் ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவர் 8 தையல்கள் போட்டார். ஆஜர் எதிரிகள் நால்வரும் மேற்படி எங்களை அசிங்கமாக திட்டி அடித்தவர்கள் ஆவார்கள். மேலும் ஸ்டீபன் (எ) எழிலரசன் மற்றும் சதீஸ் (எ) ஆசைத்தம்பி நீதிமன்றத்தில் இல்லை. பின்னர் மேற்படி சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

கடந்த 01.08.2025 அரசு தரப்பு சாட்சியாக கோவிந்தசாமி என்பவர் அ.சா. 1 எனது மகன் ஆவார். அ.சா.2 வள்ளி என்பவர் எனது மருமகள் ஆவார். சம்பவம் நடந்த போது காலையில் நடந்த சம்பவத்தின் போது நான் காட்டிற்கு மாடு ஓட்டிக்கொண்டிருந்தேன்.

மதியம் நடந்த சம்பவத்தின் போது நான் வீட்டில் இருந்தேன். சம்பவம் எங்கு நடந்ததாக எனது மகன் புகார் கொடுத்தார் என்றால் கழனியில் நடந்ததாக புகார் கொடுத்தார். கழனியில் சம்பவம் நடந்த போது நான் நேரடியாக பார்க்கவில்லை. ஆஜர் 1ம் எதிரி ஜோசப் (எ) சுப்பிரமணி என்பவர் மீது ஏற்கெனவே அசல் வழக்கு எண் 65/2022 நீதிமன்றத்தில் நான் வழக்கு தொடர்ந்தேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

ஆஜர் 1ம் எதிரி ஜோசப் (எ) சுப்பிரமணியிடம் எனது மகன் ஏற்கெனவே வழக்கு நிலுவையில் உள்ளது குறித்து கூறினார் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்த நிலத்தின் சர்வே எண் மற்றும் விஸ்திரணம் என்ன என்றால் எனக்கு ஞாபகமில்லை. 81/6A, 81/6B என்று போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 65/2022 ல் சொத்து விவரம் பழைய பட்டா எண் 1235 மற்றும புதிய பட்டா எண் 588 சர்வே எண் 61/A மற்றும் 61/B என்று கூறியுள்ளீர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

சிவில் வழக்கு மூலமாக ஆஜர் எதிரி சுப்பிரமணிக்கும் எனக்கும் முன் விரோதம் இல்லை. மேற்படி சம்பவம் நிலம் சம்பந்தமாக நடக்கவில்லை என்றால் சரியல்ல. எழிலரசன் (எ) ஸ்டீபன், சதிஸ் (எ) ஆசைத்தம்பி மற்றும் ஜெயம்மா ஆகிய மூவர் பெயரில் எனது மகன் புகார் கொடுத்துள்ளாரா என்றால் புகார் கொடுத்துள்ளார். மேற்படி வழக்கில் மேற்படி எழிலரசன் (எ) ஸ்டீபன், சதிஸ் (எ) ஆசைத்தம்பி மற்றும் ஜெயம்மா நபர்களை குற்றச்சாட்டுநர்களாக சேர்த்துள்ளார்களா என்றால் சேர்த்துள்ளார்கள். தெரிந்து தான் நான் கூறினேன்.

எனது முதல் விசாரணையில் ஆஜர் எதிரி 4 பேரும் கல் மற்றும் கட்டையால் அடித்தார்கள் என்று போலிஸ் விசாரணையில் தெரிவித்தேன் என்றால் தெரிவித்தேன்.

3 ம் எதிரி ஜோசப் என்பவரின் மனைவி ஏசுமரியாள் என்பவர் இந்நீதிமன்றதில் எனது மகன் மீது மானபங்க வழக்கு தொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது மகனை ஆஜர் எதிரிகள் அடிக்கும்போது நானும் எனது மருமகள் வள்ளியும் தடுக்கச்சென்றோம். அப்போது என்னையும் அடித்தார்கள் என்று போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் காலையில் நடந்த சம்பவத்தில் இல்லை.

என்னை காலையில் சம்பவ இடத்தில் ஆஜர் எதிரிகள் தாக்கவில்லை என்றால் சரிதான். ஜோசப் என்பவர் எனது மகனை மண்வெட்டியால் அடித்தார் என்று போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்பதால் எனது மகனை மண்வெட்டியால் அடித்த விவரம் எப்படி எனக்கு தெரியும் என்றால் சம்பவ இடத்தில் நான் இல்லை. நான் கொளத்துர் கிராமத்தின் நாட்டாமை என்றால் சரிதான். 1 ம் எதிரி ஜோசப் எனபவரும் 3 ம் எதிரி ஏசுமரியா என்பவரும் எனது பங்காளி என்றால் சரியல்ல.

சம்பவம் தொடர்பாக நான் பள்ளிப்பட்டு அரசு மருத்துவமனை மற்றும் திருத்தணி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல. எனது மகனுக்கும் ஆஜர் எதிரிக்கும் சண்டை நடக்கவில்லை ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒப்பம் /- A. தரணிதரன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பள்ளிப்பட்டு.